**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 22.09.2025**
**OS. No.116/2017**
**வழக்கு சாட்சி PW.2–செண்பகவள்ளி, த/பெ.விஜயன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

5) பிரதிவாதிகள் நாங்கள் ரோட்டை ஆக்கிரமிப்பு செய்திருந்ததாக நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள் ஆனால் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை, அதனால் பிரதிவாதிகள் எங்களை தொந்தரவு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த அறிவிப்பிற்கு பதில் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, அதற்கு பதிலாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் முறையாக மேற்கண்ட அறிவிப்பிற்கு பதில் கொடுத்திருக்கவேண்டும் என்றும், அதில் பறிப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தான் மேல்முறையீடு செய்யவேண்டும் என்றும், நேரடியாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யக்கூடாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வருவாய் துறையினரிடம் உள்ளதால் அவர்களையும் இவ்வழக்கில் நாங்கள் தரப்பினர்களாக சேர்க்கவேண்டும் என்றும் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் VS எண்டர்பிரஸஸ் அருகில் நிலம் வாங்கியதாகவும், அவர் என் தாத்தாவிடம் குறைந்த விலைக்கு சொத்தை விற்குமாறு கேட்டதாகவும், அதனால் என் தாத்தா மீது கேவியட் மனு தாக்கல் செய்தார் என்றும் இந்த வழக்கு எங்களுக்குள் உள்ள தனிப்பட்ட பிரச்சனை சம்மந்தமாக ஏற்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித வழக்குமூலமும் எழவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அரசு நிலை ஆணைகளின் படி தான் செயல்படுவார்கள் என்றும், தனிப்பட்ட முறையில் செயல்படமாட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகளில் பட்டா எண் என்று பல்வேறு பட்டா எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் தாத்தா செலுத்திய ரசீதுகளில் அவ்வாறு பட்டா எண்கள் குறிப்பிட்டிருந்தது. தாவா சொத்திற்கு பட்டா எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். எனவே மேற்கண்ட ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தபட்டவை இல்லை என்றால் சரியல்ல. என்

நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள எந்த ஒரு சட்டப்புறம்பான செயல்களிலும் பிரதிவாதிகள் செயல்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கை பொறுத்து பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.